

தனி பிரதி
ரூ.10/-


**PORIYIYAL KADHIR**




# பொறியியல் கதிர்

கதிர் 46 | பாரிப்பு 2 | திருவள்ளுவர் ஆண்டு 2045 | அக்டோபர் 2015

## அக்டோபர் திங்களில் உதித்த உத்தம தலைவர்களை உவந்து போற்றுவோம்



அண்ணல் காந்தியடிகள்



அண்ணல் அப்துல் கலாம்

நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

**தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

# கண்ணீர் அஞ்சலி



V. அடைக்கலதுரை, L.C.E.,

பொறியாளர் ஏ.அடைக்கலதுரை 1940 ல் ஜெயங்கொண்ட சோழபுரம் அருகில் உள்ள படவீக்கம் குக்கிராமத்தில் பிறந்து, கடலூர் (N.T) புனித சூசையப்பர் உயர்நிலைப் பள்ளியில் கல்வி பயின்று, 1960ல் சென்னை ஆவடி முருகப்ப செட்டியா மெமோரியல் பாலிடெக்னிக்கில் டிப்ளமா முடித்தவர்.

இவர் பொதுப்பணித்துறையில் 31.08.60ல் சேர்ந்து உதவிச் செயற்பொறியாளராக 30.04.98ல் சுமார் 38 ஆண்டுகள் பணியாற்றி பணி ஓய்வு பெற்றவர்.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தில் சேலம், புதுக்கோட்டை, மதுரை, திருச்சியில் கிளை பொறுப்பாளராக சேவை செய்து சங்க வளர்ச்சிக்கு பெரிதும் உதவியுள்ளார். குறிப்பாக புதுக்கோட்டை, திருச்சி கிளைகளில் தலைமைப் பொறுப்பில் இவர் சங்க பணியாற்றி, கிளைகளின் வளர்ச்சியை வெகுவாக மிகைப்படுத்தினார்.

மாநில தலைமைச் சங்கத்தின், துணை தலைவராகவும் பணியாற்றியுள்ளார். சங்கத்தின் மூத்தப் பொறியாளர்களில் முக்கியமாக, பேசப்பட கூடியவர்.

1977ல் மொட்டையடித்து, தொடர் உண்ணாவிரதம் இருந்த, சங்கத்தின் முத்தான மூவருள் இவரும் ஒருவர்.

சங்கத்தின் தீவிரவாதி என சொல்லும் அளவுக்கு, இவர் சங்க ஈடுபாடு கொண்ட நேர்மையான பொறியாளர். கிளைகளில் இவரை அஞ்சா நெஞ்சன் அடைக்கலதுரை என செல்லமாக அழைப்பர்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய தமிழ்நாடு பொறியியல் சங்கம் பிரார்த்திக்கிறது.

**பொதுச் செயலாளர் மடல்**

மடல் - 2 (2015 - 2016)

# தொடரும்

# நம் பயணம் .......



## அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!

தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவிப்பொறியாளர் பதவி உயர்வு பெற்ற 72 உதவிப்பொறியாளர்களை பணிவரன்முறை செய்ய மேதகு ஆளுநரின் ஒப்புதலோடு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் கடந்த 13.08.2015 அன்று ஆணை இட்டுள்ளார்கள். இந்த ஆணையை அமுல்படுத்தாமல் தலைமைப் பொறியாளர் (பொது) திருவாளர் திருமாறன் அவர்கள் வேண்டுமென்றே காலம் தாழ்த்தி வருகிறார். பலமுறை அவரை நேரில் சந்தித்து வலியுறுத்தியும் அமுல்படுத்த மறுக்கிறார். இது மிகவும் கண்டனத்துக்குரிய செயலாகும்.

இது தவிர 11 கோப்புகள் தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. தானாக நடக்க வேண்டிய கோப்புகள் கூட தேங்கிக் கிடக்கின்றன. திருவாளர் திருமாறனின் திறமையற்ற நிர்வாகம் மட்டுமல்ல இதற்கு காரணம். அவருடைய ஒருதலைபட்சமான போக்கும் இதற்கு காரணமாகும்.

பொறியாளர் சங்கத்தின் முன்னாள் கிளைத்தலைவர் திருவாளர் திருமாறனுக்கு பட்டயப் பொறியாளர்களுக்கு எதிரான கொள்கைகள் வேண்டுமானால் இருக்கலாம். ஆனால் நடுநிலையாக செயல்பட வேண்டிய தலைமைப் பொறியாளர் (பொது) பதவியில் அமர்ந்துக் கொண்டு இவ்வாறு செயல்படுவது அராஜக செயலாகும்.

நிலுவையில் உள்ள கோப்புகளை முடித்து தரும்படி இவரிடம் மனு கொடுத்தால் ''உங்கள் கடிதத்திற்கு பதில் தருகிறேன்'' என்று பதில் கூறுகிறார். பதில் தருகிறேன் என்றால் எதுவும் செய்ய மாட்டேன் என்றுதானே அர்த்தம். இது திருவாளர் திருமாறனின் ஆணவத்தையும், அராஜகத்தையும் காட்டுகிறது. இதற்கு பின்னனி என்ன?

அவர் மேலும் கூறுகையில் இந்த பதவியை நானாக கேட்டு வாங்கவில்லை. அவர்களாக கொடுத்தார்கள். நீங்கள் என்னை என்ன செய்தாலும் அதை எதிர்கொள்ள நான் தயாராக இருக்கிறேன் என்று கூறுகிறார்.

பட்டயப் பொறியாளர்களுக்கு எதுவும் செய்யக்கூடாது என்ற தவறான நோக்கத்தில் வேண்டுமென்றே தேவையற்ற விளக்கங்களை அரசிடம் கேட்டு இழுத்தடிக்கிறார்.

திருவாளர் திருமாறன் அவர்கள் நீர்வள ஆதாரத்துறையில் திறமையானவர் என்று சொல்ல முடியாது. இவருக்கு நிர்வாக திறமையும் கிடையாது. அப்படிப்பட்ட ஒருவர் இப்படிப்பட்ட முக்கிய பதவியில் அமர்ந்துக் கொண்டு பொதுப்பணித்துறையை கெடுத்துக் கொண்டிருக்கிறார். திருவாளர் திருமாறன் திருந்த வேண்டும் அல்லது தன்னுடைய நிர்வாக திறமையற்ற இயலாமையை உணர்ந்து அந்த பதவியில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும். தன்னுடைய மோசமான போக்கால் அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்தக் கூடாது.

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

**D. முருகேசன்,** பொதுச் செயலாளர்
செல்பேசி எண் 9444 999 588, 988 444 98 97
E.mail: d.murugavelsivan@gmail.com

வடக்கு மண்டல பொறுப்பாளர்கள் சிறப்பு கூட்ட நிகழ்வுகள்



# 05.09.2015 அன்று மதுரையில் நடைபெற்ற சிறப்பு கலந்தாய்வுக் கூட்டம் மற்றும் மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம்

பட்டயம் முடித்த பணி ஆய்வாளர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர் / வரை தொழில் அலுவலர் பதவி உயர்வு பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதற்கிடையில் பணி ஆய்வாளர்களில் ஒரு பிரிவினர் தங்களுக்கு இளநிலைப்பொறியாளர் பதவி உயர்வு பெற்றுத்தரவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர் இது சம்பந்தமாக விரிவாக விவாதித்து முடிவு எடுப்பதற்காக ஒரு சிறப்பு கலந்தாய்வுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

05.09.2015 அன்று காலை மதுரை, ஹோட்டல் வெஸ்டன் பார்க் கில் சிறப்பு கலந்தாய்வுக்கூட்டம் மாநிலத்தலைவர் பொறி.எம்.பஞ்சவர்ணம் அவர்கள் தலைமையிலும் பொதுச்செயலாளர் பொறி. த.முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

மையச்சங்க பொறுப்பாளர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தார்கள். பெரும்பாலான உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள்.

சிறப்பு கலந்தாய்வுக்கூட்டம் முடிவடைந்தவுடன் மையச்சங்க பொறுப்பாளர்கள் கூட்டம் மாநிலத்தலைவர் பொறி.எம்.பஞ்சவர்ணம் அவர்கள் தலைமையிலும் பொதுச்செயலாளர் பொறி. த.முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

1. பட்டயம் முடித்த பணி ஆய்வாளர்கள் முதுநிலையை மாற்றி அமைப்பது சம்பந்தமாக தற்போது எந்த வித நடவடிக்கையும் எடுக்கவேண்டாம் என முடிவு செய்யப்பட்டது
2. தொழில் நுட்ப உதவியாளர் / வரை தொழில் அலுவலர் பதவிகள் அவரவர் விருப்பத்திற்கேற்ப பெற்று தருவது என தீர்மானிக்கப்பட்டது.
3. பத்து ஆண்டுகள் பணி முடித்த பட்டயம் முடித்த பணி ஆய்வாளர்களுக்கு இளநிலைப்பொறியாளர் பதவி உயர்வு அளிக்க விதித்திருத்த கோப்பை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுப்பது என முடிவெடுக்கப்பட்டது.
4. நாட்காட்டி, நாட்குவடி ஆகியவற்றை சென்னை அகரம் பிரிண்டெக்கு நிறுவனம் மூலமாக அச்சடிப்பது என முடிவெடுக்கப்பட்டது.
5. நாட்குவடி ஒருபக்கத்திற்கு ஒரு தேதி என்ற முறையில் அச்சடிப்பது என முடிவெடுக்கப்பட்டது.
6. நாட்காட்டி மல்டி கலர் முறையில் அச்சடிப்பது எனவும் அதில் நூற்றாண்டு நிறைவு விழா புகைப்படங்களை அச்சடிப்பது எனவும் முடிவெடுக்கப்பட்டது.
7. உச்ச நீதி மன்றத்தில் தனி நபர்கள் தொடுக்கும் வழக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மேற்பார்வையில் நடத்தப்படவேண்டும் என முடிவெடுக்கப்பட்டது.

பெறுநர்,
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு,
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
பொதுப்பணித்துறை,
சேப்பாக்கம், சென்னை - 5.

ஐயா,

பொருள்: பொதுப்பணித்துறை - தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் வருடக்கணக்கில் தாமதமாகும் கோப்புகள் - நடவடிக்கை எடுக்க கோருதல் -சம்பந்தமாக.

பார்வை : தமிழ்நாடு பொறியயல் சங்கத்தின் பல்வேறு கடிதங்கள் .

தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் தானாக நடக்க வேண்டிய பல்வேறு கோப்புகள் மிக அதிகபட்சமாக காலதாமதப்படுத்தப்பட்டு வருகிறது. அரசிடமிருந்து கூடுதல் விவரங்கள் கேட்டு குறிப்புரைகளுடன் தலைமைப்பொறியாளர் (பொது) அலுவலகத்திற்கு அனுப்பப்படும் கோப்புகள் மீண்டும் அரசுக்கு பதில் அனுப்பாமல் வருடக்கணக்கில் தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் தாமதப்படுத்தப்பட்டு வருகிறது.

கீழ்கண்ட கோப்புகள் தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் தாமதப்படுத்தப்பட்டு வருகிறது.

1. அரசு ஆணை (நிலை) எண்.155 பொதுப்பணி (பி2) துறை நாள். 13.08.2015 யை அமுல்படுத்துதல்
2. பகுதி நேர பட்டம் பயின்ற இளநிலைப்பொறியாளர்களுக்கு உதவிப்பொறியாளர் பதவி பெயர் மாற்றம் (Re-Designation) அளிக்கும் கோப்பு
3. பதவி பெயர் மாற்றம் பெற்ற உதவிப்பொறியாளர்களை பணிவரன் முறைப்படுத்தும் கோப்பு
4. இளநிலைப்பொறியாளர்களை பணிவரன்முறை செய்யும் கோப்பு
5. தொழில் நுட்ப உதவியாளர்களுக்கு இளநிலைப்பொறியாளர் பதவி உயர்வு அளிக்கும் கோப்பு
6. பணிநீக்கம் செய்யப்பட்டு மீண்டும் மறு பணியமர்வு செய்யப்பட்ட இளநிலைப் பொறியாளர்களின் பணியிடைக்காலம் பிழை பொறுத்தல் கோப்பு (Break in Condonation)
7. பட்டயம் முடித்த பணி ஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் / வரைவாளர் பதவி உயர்வு அளிக்கும் கோப்பு
8. காலியாகவுள்ள தொழில் நுட்ப உதவியாளர் (சிவில்) பதவிகளை நிரப்புதல்
9. விதித்திருத்த கோப்பு - பட்டயம் படித்து பத்து ஆண்டுகள் பணிமுடித்த பணி ஆய்வாளர்களுக்கு இளநிலைப்பொறியாளர் பதவி உயர்வு அளிக்கும் விதித்திருத்த கோப்பு
10. விதித்திருத்த கோப்பு - தமிழ்நாடு பொறியியல் சார்நிலை பணித்தொகுதி.
11. விதித்திருத்த கோப்பு - தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலைப்பொறியாளர் தேர்வு செய்வது சம்பந்தமான விதித்திருத்த கோப்பு.

எனவே. மேற்கண்ட கோப்புகளின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(த. முருகேசன்)
பொது செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

பெறுநர்,
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு,
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
பொதுப்பணித்துறை,
சேப்பாக்கம், சென்னை - 5.

ஐயா,

பொருள்: பொதுப்பணித்துறை - பட்டயம் முடித்த பணி ஆய்வாளர்களுக்கு - தொழில் நுட்ப உதவியாளர் / வரை தொழில் அலுவலர் பதவி உயர்வு - சம்பந்தமாக.

பார்வை : முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை - 5.அவர்களின் கடித எண். எஸ்.4(2)/27376/2015 . நாள். 03.08.2015.

பார்வையில் கண்டுள்ள கடிதத்தில் பட்டயம் முடித்த பணி ஆய்வாளர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர் / வரை தொழில் அலுவலர் பதவி உயர்வு அளிக்க விவரங்கள் கோரப்பட்டுள்ளது. அத்துடன் 192 நபர்களுக்கான பெயர்பட்டியலும் இணைக்கப்பட்டுள்ளது. அந்த பெயர் பட்டியலில் தகுதியுள்ள பலரின் பெயர்கள் விடுப்பட்டுள்ளது. எனவே பட்டியலில் விடுப்பட்டுள்ளவர்களின் விவரங்களையும் முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு அனுப்ப வலியுறுத்தி அனைத்து தலைமைப் பொறியாளர்களுக்கும் மீண்டும் கடிதம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(த. முருகேசன்)
பொது செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

---

பெறுநர்,
முதன்மை தலைமைப் பொறியாளர் (நீ.வ.ஆ),
தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து.,
சேப்பாக்கம், சென்னை - 5.

ஐயா,

பொருள்: பொதுப்பணித்துறை - 2015-2016 ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு காலிப் பணியிட எண்ணிக்கை (Estimate of Vacancy) கருத்துரு அரசுக்கு அனுப்பக் கோருதல்- சம்பந்தமாக

2015-2016 ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு காலிப் பணியிட எண்ணிக்கை (Estimate of Vacancy) கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

பெறுநர்,
முதன்மை தலைமைப் பொறியாளர் (நீ.வ.ஆ),
தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து.,
சேப்பாக்கம், சென்னை - 5.

ஐயா,

பொருள்: பொதுப்பணித்துறை - உதவிப்பொறியாளர் (Assistant Engineer)
தேர்ந்த முதுநிலைப் பட்டியல் (Seniority List) - சம்பந்தமாக

..............................

தலைமைப்பொறியாளர்(பொது) அலுவலகத்தில் தற்போது உதவிப் பொறியாளர்களுக்கான தேர்ந்த முதுநிலைப்பட்டியல் (Seniority List) தயாரிக்கப்பட்டு வருகிறது.

அதில் 2000 - 2007 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் ஊட்டுப் பதவியிலிருந்து உதவிப்பொறியாளர் பதவி உயர்வு பெற்றவர்களின் பெயர்களை விட்டு விட்டு முதுநிலைப்பட்டியல் தயாரித்து வருவதாக தெரியவருகிறது.

இது விதிகளுக்கு புறம்பான ஒரு செயலாகும். எனவே ஊட்டுப் பதவியிலிருந்து உதவிப்பொறியாளர் பதவி உயர்வு பெற்றவர்களையும் சேர்த்து உதவிப்பொறியாளர் முதுநிலைப்பட்டியல் தயாரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(து. முருகேசன்)
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

## இரங்கல் செய்தி

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி- தூத்துக்குடி கிளை உறுப்பினர் P. முத்துசாமி இளம்பொறியாளர் அவர்களின் மாமனார் P. கணபதி அவர்கள் 18.09.2015 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை உறுப்பினர் பொறியாளர் P. பரமசிவம் உதவிப் பொறியாளர் அவர்களின் தாயார் இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் காஞ்சிபுரம் கிளை உறுப்பினர் R.முனுசாமி இளம்பொறியாளர் அவர்களின் மனைவி M. இராணி அவர்கள் 14.05.2015 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

**அன்பார்ந்த சகோதர சகோதரி பொறியாளர்களே!**

வணக்கம். நூற்றாண்டு விழா கண்ட (பொதுப்பணித்துறை) தமிழ்நாடு பொறியியல் சங்கம் சார்ந்த டிப்ளமா பொறியாளர்கள், தமிழ்நாடு டிப்ளமா பொறியாளர் பேரவை என்ற அமைப்பினை முன்னின்று தோற்றுவித்ததோடு தமிழகத்தின் அனைத்து பொறியியல் சார்ந்த டிப்ளமா பொறியாளர் நலனுக்காக பாடுபட்டு வருவது மிகுந்த மனமகிழ்வைத் தருகிறது. அவ்வகையில் தேசிய அளவில் டிப்ளமா பொறியாளர்களின் நலனைக்காக்க அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாமன்றம் பாடுபட்டு வருவதை அனைவரும் அறிவீர்கள். தற்போது மைய அரசின் 7வது ஊதியக்குழுவின் பரிந்துரையில் நமது நலனை காக்க முனைப்புடன் செயலாற்றி வருகிறது. அத்துடன் மாநில அளவில் டிப்ளமா பொறியாளர் நலன் காத்திட தேவைப்படும் நேரங்களில் தமது நேசக்கரத்தை நீட்டிட தயங்கியதே கிடையாது. அத்தகைய மாமன்றம் மாத இதழாக அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாமன்ற மலரினை வெளியிட்டுவருகிறது. அதற்கான சந்தா விவரம் பின்வருமாறு:

2 ஆண்டு சந்தா ரு.200/-

5 ஆண்டு சந்தா ரு.400/-

அகில இந்திய அளவில் டிப்ளமா பொறியாளர்களின் நிலை, பல்வேறு மாநிலங்களில் நிலவும் பிரச்சனைகள், சலுகைகள் போன்றவற்றை அறிந்து கொள்ள இந்த மாத இதழ் உதவும். எனவே, அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாமன்றத்தின் வளர்ச்சிக்கு உதவும் வகையில், மாத இதழை ஒவ்வொரு டிப்ளமா பொறியாளரும் வாங்க முன் வரவேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைக்கிறேன். சந்தா மற்றும் முழு முகவரி மற்றும் அலைபேசி எண்ணுடன் எனது முகவரிக்கோ அல்லது அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாமன்றத்திற்கோ அனுப்பி வைத்திட வேண்டுகிறேன்.

எனது முகவரி:

V.V.Chidamabaram
Zonal Secretary (South) AIFODE
New No.20, Mandapam Street,
Pillaiyarpalayam. Kancheepuram-631 501
Cell: 98425 26663

சந்தா தொகையை All India Federation of Diploma Engineers Delhi - 96 என்ற பெயருக்கு வரைவு காசோலை (Demand Draft) எடுத்து

All India Federation of Diploma Engineers
Dutt Bhavan, New Ashok Nagar, near Metro Station.
Delhi - 110 096
Office Phone No - 011 - 22717062 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

மிக்க நன்றி

அன்புடன்
வா.வே.சிதம்பரம்
தென் அண்டல செயலாளர்
அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாமன்றம்



ஆர்.கே.சுந்தரம்
தேர்வுநிலை உதவி செயற்பொறியாளர்
(பணி நிறைவு)
வடபழநி

என் நெஞ்சினில் போற்றி மதிக்கும் இளவல் பொறிஞர் D. முருகேசனுக்கு நல்லாசிகள்,

எம் பேரியக்கத்தை முன்னின்று நடத்திச்செல்லும் பொதுச் செயலராக எட்டாவது முறையாகத் தொடர்ந்து தேர்வு செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சியில் உள்ளம் திளைக்கிறது. துடிப்பும், உழைப்பும் கூடிய உறுப்பினர்கள் மனதினில் தனியாக ஒரு இடத்தைப் பிடித்துள்ள காரணத்தால் தான் இவ்வெற்றி தொடருகிறது. இது ஒருகண்கட்டு வித்தையல்ல எதிலும் பட்டும் படாமலும் மேலெழுந்த வாரியாக நழுவிச் செல்லாமல், நேரடியாகவே தனது மனதில் பட்டதை சொல்கிறீர்களே! அது தான் தங்களின் மிகப்பெரிய பலம். லாப நட்ட கணக்குப்பார்க்காமல் தனது மனஉழைப்பு, உடல் வியர்வையைச் சிந்தி பொது வாழ்க்கையில் பொலிவு காணும் பிரம்மச்சாரியே! அனுமனின் ஆற்றலில் எள்ளளவும் குறையாமல் தாங்கள் பெற்றிருப்பது இறைவன் தந்த வரம். அந்த வரம் வளரவேண்டும். தாங்கள் எதிர் கொள்ள வேண்டிய சவால்களை பொதுச்செயலர் மடலில் பட்டியலிட்டீர்களே! அதைப்படித்ததும் சற்று மலைத்துப் போனேன். தம்பியுடையான் படைக்கஞ்சான் என்பார்கள். தங்களுடன் தேர்வு செய்யப்பட்டுள்ள அத்தனை நண்பர்களும் உங்களுக்கு உறுதுணையாக நிற்பார்கள். நான் பணியிலிருந்த தருணங்களில் கிளைப்பொறுப்பாளராக சிறப்புடன் செயல்பட்ட எஸ்.கண்ணன் தொடர்ந்து மையச்சங்கப் பொறுப்பாளராக நீடிப்பது அவரின் பற்று, சங்க ஈடுபாடுகள், துணிச்சல் அத்துணையையும் சொல்கிறது. அடலேறுகள்! இப்படை எதற்கும் அஞ்சாது. பீடு நடைபோடுங்கள்

Coming together is a beginning
keeping together is a progress
working together is a success

இதுதான் நம் தாரக மந்திரம்!

பணியமைப்பு - பொதுப்பணித்துறை - தமிழ்நாடு பொறியியல் பணித்தொகுதி - தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து இளநிலைப் பொறியாளர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்டு பின்னர் பணிமாற்றம் மூலம் முன் தேதியிட்டு உதவிப் பொறியாளர்களாக (சிவில்) பணியமர்த்தப்பட்டவர்கள் - உதவிப் பொறியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் - விதிகளைத் தளர்த்துதல் - ஆணை வெளியிடப்படுகின்றன.

பொதுப்பணி (பி2) துறை

அரசாணை (நிலை) எண்.155 நாள்.13.08.2015

மன்மத ஆடி 28

திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டது

முதன்மைத் தலைமைப்பொறியாளர் (கட்டடம்) தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை மண்டலம் மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) பொதுப்பணித்துறை கடித எண். எஸ் 2 (2) / 29148 / 2004, நாள்.24.07.2013. 21.04.2014 மற்றும் 28.05.2014

**ஆணை:**

முதன்மைத் தலைமைப்பொறியாளர் (கட்டடம்) தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை மண்டலம் மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்கள், மேலே படிக்கப்பட்ட தனது கடிதங்களில், உச்ச நீதி மன்றத்தில் சிறப்பு அனுமதி மனு 2495 / 2007-இல் வழங்கப்படவுள்ள தீர்ப்பிற்கு உட்பட்டு தமிழ் நாடு பொறியியல் பணி மற்றும் தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப் பணிகளுக்கான சிறப்பு விதிகளுக்கு விதித் திருத்தம் நிலுவையில் இருக்கும்போது, தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்தபோதே,பொறியியல் பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்ற பின்னர் பதவி உயர்வில் இளநிலைப்பொறியாளர்களாக பணிபுரிந்து வந்த இவ்வாணையின் பிற்சேர்க்கையில் உள்ள நபர்களுக்கு, 24.2.2006 முதல் முன்தேதியிட்டு தற்காலிக அடிப்படையில் உதவிப் பொறியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது என்றும் இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவிப்பொறியாளர்களாக பணி நியமனம் வழங்க அரசாணை நிலை எண்.1, பொதுப்பணித்துறை நாள் 2.1.1990இல் வழிவகை செய்யப்படவில்லை என்றும் தொழில் நுட்ப உதவியாளர்களுக்கு உதவிப் பொறியாளர்களாக பணி நியமனம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண்.1. பொதுப்பணித்துறை நாள்.2.1.1990இல் வெளியிடப்பட்டுள்ள ஆணைக்கு தமிழ் நாடு பொறியியல் பணிகளுக்கான சிறப்பு விதிகளுக்கு இது நாள் வரை விதித் திருத்தம் வெளியிடப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

2. இளநிலைப் பொறியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் (சிவில்) பணி நியமனம் வழங்குவதற்கு அரசாணை (நிலை) எண்1 பொதுப்பணித்துறை நாள் 2.1.1990-இல் வழிவகை செய்யப்படாத நிலையிலும் இந்த அரசாணையின் படி தமிழ்நாடு பொறியியல் பணி மற்றும் தமிழ்நாடு பொறியியல் சார் நிலை பணிகளுக்கான சிறப்பு விதிகளுக்கு விதித் திருத்தம் வெளியிடப்படாத நிலையிலும் இளநிலைப்பொறியாளர்களாக பதவி உயர்வு பெறும்

முன்னரே பொறியியல் பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்று இளநிலைப்பொறியாளர்களாக பதவி உயர்வும் பெற்று பின்னர் 24.2.2006 முதல் முன் தேதியிட்டு உதவிப்பொறியாளர்களாக (சிவில்) பணி நியமனம் செய்யப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் உள்ள 72 நபர்களின் பணியினை உதவிப்பொறியாளர் (சிவில்) பதவியில் வரன்முறை செய்ய அரசின் ஆணை பெற்று வழங்குமாறு முதன்மை தலைமைப்பொறியாளர் (கட்டடம்) தலைமைப்பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) பொதுப்பணித்துறை, சென்னை வேண்டியுள்ளார்.

3. முதன்மை தலைமைப்பொறியாளர் (கட்டடம்) தலைமைப்பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) பொதுப்பணித்தறை அவர்களின் கருத்துரு தமிழ்நாடு பொறியியல் பணிகளுக்கான (பிரிவு1 பொதுப்பணிகள்) சிறப்பு விதிகளின் விதி 2(a) மற்றும் விதி 5 மற்றும் அரசாணை (நிலை) எண்.1 பொதுப்பணித் துறை நாள்.2.1.1990 ல் வெளியிடப்பட்டுள்ள ஆணை ஆகியவற்றின்படி நன்கு ஆய்வு செய்யப்பட்டது

4. தமிழ்நாடு பணிவிதித் தொகுப்பு தொகுதி ஒன்றில் தமிழ்நாடு மாநில மற்றும் சார் நிலைப் பணிகளுக்கான விதிகள் பகுதி II ல் பொது விதிகளில் விதி 48ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இளநிலைப்பொறியாளர்களாக பதவி உயர்வு பெறும் முன்னர், அதாவது தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்த பொழுதே பொறியியல் பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்று இளநிலைப்பொறியாளர்களாக பதவி உயர்வும் பெற்று பின்னர் முன் தேதியிட்டு பணி மாறுதல் மூலம் உதவிப்பொறியாளர்களாக (சிவில்) பணி நியமனம் செய்யப்பட்ட 72 நபர்களின் பணியினை இவ்வாணையின் பிற்சேர்க்கையில் உள்ளவாறு உதவிப்பொறியாளர் (சிவில்) பதவியில் பணி வரன்முறை செய்ய ஏதுவாக அவர்கள் பொருட்டு தமிழ்நாடு பொறியியல் பணிகளுக்கான சிறப்பு விதிகளில் பகுதி II பிரிவு I பொதுப்பணிகள் கீழுள்ள விதி 2(a) மற்றும் விதி 5 ஆகியவற்றை தளர்வு செய்து தமிழ்நாடு ஆளுநர் அவர்கள்ஆணையிடுகிறார். மேலும் இவ்வாணையின் பிற்சேர்க்கையில் உள்ள நபர்களின் பணியினை உதவிப்பொறியாளர் (சிவில்) பதவியில் வரன்முறை செய்ய ஏதுவாக அரசாணை (நிலை) எண்.1 பொதுப்பணித்துறை நாள் 2.1.1990 ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையிலிருந்து விலக்களித்து அரசு ஆணையிடுகிறது.

5. உரிமையியல் மேல் முறையீடு மனுக்கள் 995 / 2009, 997/2009 மற்றும் 998/2009 ஆகியவற்றில் உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்கு உட்பட்டும் தமிழ்நாடு பொறியியல் பணி மற்றும் தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப் பணிகளுக்கான சிறப்பு விதிகளுக்கு விதித் திருத்தம் வெளியிடுவதை எதிர்நோக்கியும் பணி வரன்முறை செய்யப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் இவ்வாணையின் பிற்சேர்க்கையில் உள்ளவாறு 72 நபர்களின் பணியினை உதவிப்பொறியாளர் (சிவில்) பதவியில் வரன்முறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு முதன்மை தலைமைப்பொறியாளர் நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்
அரசு முதன்மைச்செயலாளர்

**அரசாணை (நிலை) எண்.155 பொதுப்பணி(பி2)த்துறை**
**நாள்/ 13.08.2015-இன் பிற்சேர்க்கை**
**இளநிலைப் பொறியாளர் (சிவில்) பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் (சிவில்)**
**ஆக பணி நியமனம் செய்யப்பட்டவர்கள்**

| வ. எண் | பெயர் | பிறந்த தேதி | இளநிலைப் பொறியாளராக பணியில் சேர்ந்த நாள் | உதவிப் பொறியாளராக பணியமர்த்தப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1 | ராஜகோபால். J | 31.07.1962 | 24.03.2005 | 24.02.2006 |
| 2 | சங்கர். M | 20.07.1964 | 25.07.1997 | 24.02.2006 |
| 3 | பரமசிவம். V | 06.03.1962 | 01.08.1997 | 24.02.2006 |
| 4 | பஞ்சவர்ணம். M | 23.09.1962 | 08.08.1997 | 24.02.2006 |
| 5 | சம்பத். R | 17.06.1959. | 31.12.2001 | 24.02.2006 |
| 6 | பழனியப்பன். M | 08.04.1959 | 01.08.1997 | 24.02.2006 |
| 7 | புண்ணியகோட்டி. N | 15.04.1963 | 30.07.1997 | 24.02.2006 |
| 8 | மனோகரன். R | 20.07.1960. | 30.07.1997 | 24.02.2006 |
| 9 | ஹரிஹரன் J | 03.05.1961 | 30.07.1997 | 24.02.2006 |
| 10 | திருவேங்கடமூர்த்தி. A | 08.06.1964 | 25.07.1997 | 24.02.2006 |
| 11 | முருகானந்தம். S.M. | 30.05.1963 | 01.08.1997 | 24.02.2006 |
| 12 | கதிரவன். S | 04.07.1965. | 04.08.1997 | 24.02.2006 |
| 13 | கண்ணன். C | 12.05.1963 | 25.07.1997 | 24.02.2006 |
| 14 | லோககுரு. M | 03.04.1964 | 23.07.1997 | 24.02.2006 |
| 15 | செல்வராஜ். C | 06.06.1965 | 01.07.2000 | 24.02.2006 |
| 16 | நடராஜரத்தினம். S | 16.10.1962 | 23.07.1993 | 24.02.2006 |
| 17 | பார்த்திபன். T.S | 28.03.1963 | 06.12.2004 | 24.02.2006 |
| 18 | ஜெயராமன். C | 30.05.1964 | 10.02.2000 | 24.02.2006 |
| 19 | கண்ணப்பன். K | 15.02.1963 | 19.01.2000 | 24.02.2006 |
| 20 | ராமசுப்பிரமணியன். B | 15.05.1964 | 31.12.1999 | 24.02.2006 |
| 21 | சுப்பிரமணியன். K | 14.05.1960 | 04.04.2000 | 24.02.2006 |
| 22 | வேதமூர்த்தி. R | 16.06.1965 | 25.07.1997 | 24.02.2006 |
| 23 | எத்திராஜுலு. R | 11.06.1965 | 03.02.2000 | 24.02.2006 |
| 24 | கணேசன். M | 04.03.1957 | 01.12.2004 | 24.02.2006 |
| 25 | சாந்தி. A | 01.03.1963 | 22.02.2001 | 24.02.2006 |
| 26 | ராஜா. M | 01.05.1963 | 22.02.2001 | 24.02.2006 |
| 27 | ரஞ்சன். K.N. | 25.05.1962 | 28.02.2001 | 24.02.2006 |
| 28 | சென்ராம். M | 30.05.1962 | 09.01.2004 | 24.02.2006 |
| 29 | வினயசெல்வா. S | 10.06.1964 | 30.04.2003 | 24.02.2006 |
| 30 | குமரகுரு. K.R. | 28.11.1963 | 21.04.2003 | 24.02.2006 |
| 31 | சுப்பிரமணி. T.S. | 25.02.1962 | 21.04.2003 | 24.02.2006 |
| 32 | சையதுஅப்பாஸ்அலி. T | 01.12.1964 | 21.04.2003 | 24.02.2006 |
| 33 | பழனிசாமி. G | 05.05.1965 | 17.04.2003 | 24.02.2006 |
| 34 | கண்ணன். S | 12.04.1965 | 25.04.2003 | 24.02.2006 |

| | | | | |
|---|---|---|---|---|
| 35 | பாலகிருஷ்ணன். M | 03.01.1962 | 16.04.2003 | 24.02.2006 |
| 36 | சுவாமிநாதன். S | 25.03.1964 | 23.04.2003 | 24.02.2006 |
| 37 | எட்வின்ஜெயராஜ். S | 29.05.1963 | 21.04.2003 | 24.02.2006 |
| 38 | சுகந்தா. P | 28.07.1963 | 15.04.2003 | 24.02.2006 |
| 39 | ஆதிமூலம். K | 02.06.1965 | 16.04.2003 | 24.02.2006 |
| 40 | சீதாபதி. A | 02.06.1962 | 23.04.2003 | 24.02.2006 |
| 41 | உமாமகேஸ்வரி. K | 07.04.1965 | 23.04.2003 | 24.02.2006 |
| 42 | பன்னீர்செல்வம். C | 05.06.1965 | 16.04.2003 | 24.02.2006 |
| 43 | ஆறுமுகம். P | 07.01.1966 | 16.04.2003 | 24.02.2006 |
| 44 | கோபிநாத். T.S | 30.05.1963 | 16.04.2003 | 24.02.2006 |
| 45 | பரமசிவம். R | 08.03.1965 | 16.04.2003 | 24.02.2006 |
| 46 | முருகேசன். N | 15.06.1965 | 01.05.2003 | 24.02.2006 |
| 47 | சண்முகம். R | 05.06.1964 | 16.04.2003 | 24.02.2006 |
| 48 | ராஜதிலகா. S | 26.03.1966 | 04.06.2003 | 24.02.2006 |
| 49 | சுந்திரசேகரன். M | 05.04.1960 | 01.05.2003 | 24.02.2006 |
| 50 | பாண்டியம்மாள். S | 25.05.1965 | 21.04.2003 | 24.02.2006 |
| 51 | மோகன்குமார். C.P. | 12.05.1966 | 21.04.2003 | 24.02.2006 |
| 52 | கணபதி. C | 15.05.1960 | 01.05.2003 | 24.02.2006 |
| 53 | சரவணபவன். S.G | 16.01.1965 | 17.04.2003 | 24.02.2006 |
| 54 | ஜெயசங்கர். K | 20.05.1965 | 18.04.2003 | 24.02.2006 |
| 55 | அழகர்சாமி. S | 10.05.1965 | 22.04.2003 | 24.02.2006 |
| 56 | ராஜேந்திரன். S | 16.04.1964 | 17.04.2003 | 24.02.2006 |
| 57 | யசோதை. S | 27.04.1962 | 24.03.2005 | 24.02.2006 |
| 58 | சுகுமார். S | 03.06.1965 | 24.11.2004 | 24.02.2006 |
| 59 | ராமர். K | 30.04.1965 | 02.12.2004 | 24.02.2006 |
| 60 | இளங்கோவன். G | 25.05.1966 | 25.11.2004 | 24.02.2006 |
| 61 | அழகர்சாமி. R | 19.06.1965 | 01.12.2004 | 24.02.2006 |
| 62 | நாராயணசாமி. R | 29.10.1964 | 01.12.2004 | 24.02.2006 |
| 63 | விசுவமித்திரன். A | 03.02.1962 | 24.11.2004 | 24.02.2006 |
| 64 | பாண்டியன். A | 10.01.1966 | 24.11.2004 | 24.02.2006 |
| 65 | பொன்னுசாமி. R | 04.06.1966 | 24.11.2004 | 24.02.2006 |
| 66 | ரவிச்சந்திரன். V | 19.04.1967 | 24.11.2004 | 24.02.2006 |
| 67 | முகமது ரபி. M.S | 10.06.1965 | 09.12.2004 | 24.02.2006 |
| 68 | பிரபாகரன். T.S. | 04.11.1965 | 24.11.2004 | 24.02.2006 |
| 69 | சண்முகராஜா. C | 03.03.1963 | 01.06.2005 | 24.02.2006 |
| 70 | கந்தசாமி. S | 13.06.1966 | 02.12.2004 | 24.02.2006 |
| 71 | கோபாலகிருஷ்ணன். K | 20.05.1965 | 01.03.2007 | 24.02.2006 |
| 72 | சிவகுமார். S. | 03.03.1953 | 28.06.2007 | 24.02.2006 |

நா.ச.பழனியப்பன்
அரசு முதன்மைச்செயலாளர்
/உண்மைநகல்/

# இயங்கும் உலகம்

**திருச்சி கிளை**

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளையின் பொதுக்குழு கூட்டம் திருச்சி மன்னார்புரம் பொறியாளர் முருகானந்தம் இல்லம் ஹம்ஜா - கேசவராவ் அடைக்கலதுரை அரங்கில் 01.08.2015 அன்று மாலை 4.30மணியளவில் சிறப்பாக நடைபெற்றது. இப்பொதுக்குழுக் கூட்டத்திற்கு கிளையின் தலைவர் பொறி.வி.வேதரத்னம் அவர்கள் தலைமையேற்று நடத்தினார். இந்தப் பொதுக்குழு கூட்டத்திற்கு தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலத்தலைவர் பொறி.எம்.பஞ்சவர்ணம் மற்றும் கிழக்கு மண்டலச்செயலாளர் பொறி.ஆர்.தயாளகுமார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.

பொதுக்குழுக் கூட்டத்திற்கு வருகைபுரிந்தவர்களை கிளையின் துணைத்தலைவர் பொறி.ஆர்.தியாகராஜன் அவர்கள் வரவேற்று பேசியதை அடுத்து நம் பாரத தேசத்தின் முன்னாள் குடியரசுத்தலைவர் பொறியாளர். முனைவர் கல்வித்தந்தை விண்வெளி சாதனையாளர் முனைவர் APJ. அப்துல்கலாம் அவர்களின் மறைவிற்கு கிளையின் சார்பாக அவரது ஆத்மா சாந்தியடைய மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து இக்கிளையைச் சேர்ந்த முன்னாள் செயலாளர் பொறி.என். முருகேசன் அவர்களின் அன்புத்தாயார் மற்றும் உறுப்பினர் ஆர்.ராமர் அவர்களது அன்புத்தாயார் ஆகியோரது மறைவிற்கும் கிளையின் சார்பாக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனையடுத்து, தலைவர் தமது உரையில் உறுப்பினர்களது வருகை திருப்திகரமாக இருந்ததையும் கிளைச்சங்கக் கூட்டத்திற்கு தற்போது செய்யப்பட்டு வரும் பராமரிப்பு பணிகளுக்கு உறுப்பினர்களிடம் பொருளுதவி நல்கிடுமாறு கேட்டுக்கொண்டார். அடுத்து செயலாளர் பொறி.ஆர்.ஜெயராமன் தமது உரையில் உறுப்பினர்களின் ஒற்றுமை குறித்தும், கிளைச்சங்கக் கூட்டத்தில் தற்பொது நடைபெற்று வரும் பராமரிப்பு பணிகளுக்கு உறுப்பினர்களிடம் இருந்து பொருளுதவி பெற்று சங்கத்தின் நிதி இல்லாமலேயே மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விவரித்துப் பேசினார். கிளையின் துணைத்தலைவர் பொறி.ஆர்.தியாகராஜன், அவர்கள் கட்டட நிதியாக ரூ.25000/-வழங்கி கிளைக்கு பெருமை சேர்த்தார். சிறப்பு அழைப்பாளராக வருகை புரிந்த மாநிலத்தலைவர் மற்றும் கிழக்கு மண்டல செயலாளர் ஆகியோர் கிளையின் சார்பாக பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

இதனையடுத்து கிழக்கு மண்டலச் செயலாளர் பொறி.ஆர். தயாளகுமார் அவர்கள் தமது சிறப்புரையில் வரலாற்று சிறப்பு மிக்க தமிழ்நாடு பொறியியல் சங்கம் தமது நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடிய போது சிறப்பு அழைப்பாளராக வருகை புரிந்து வரலாறு காணாத வகையில் விழாவினை சிறப்பித்த இந்திய நாட்டின் முன்னாள் குடியரசுத்தலைவர் முனைவர் APJ அப்துல்கலாம் அவர்கள் நம்முடன் இருந்து கலந்துரையாடிய இனிமையான நினைவுகளை அசைபோட்டுப் பார்ப்பதற்குள் சற்றும் எதிர்பாராத நிலையில் இப்பொழுது நம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்துவிட்டார். நமது பிறப்பு சம்பவமாக இருந்தாலும் இறப்பு சரித்திரமாக

இருக்க வேண்டும் எனவும் விஞ்ஞான வளர்ச்சியில் நிற்கலாம் நடக்கலாம் என்று இருந்த இந்தியாவை பறக்கலாம் சாதிக்கலாம் என்று விஞ்ஞானத்தின் உச்சிக்கே இந்தியாவை எடுத்து சென்ற பெருமை கலாமையே சாரும். நாம் உறங்கும் போது வருவது கனவல்ல நம்மை உறங்க விடாமல் செய்வதே கனவு என்று இளைஞர்களுக்கு எழுச்சியூட்டிய மாமனிதர் அப்துல்கலாம் இத்தனை சிறப்பு வாய்ந்த விண்வெளிச்சாதனை மன்னர் இன்று நம்மிடத்தில் இல்லை. அவரது இறுதிச்சடங்கில் இராமேஸ்வரம் கடலில் மிதந்ததா, ஒட்டுமொத்த இந்திய மக்களின் கண்ணீரில் மிதந்ததா என வியக்க வைத்தது. அவரது இழப்பு இன்னமும் நம் மனதில் கற்பனையாகத்தான் உள்ளது. அவரது பூத உடல் இராமேஸ்வரம் கடற்கரைப்பகுதியில் புதைக்கப்படவில்லை. விதைக்கப்பட்டு இருக்கின்றது. அவர் நமக்குத்தந்த அறிவுரைகளையும் எழுச்சி மிக்க கருத்துக்களையும் எல்லாவற்றிற்கும் மேலாக அவரது எளிமையையும் மிகச்சிறந்த வழிகாட்டுதலாக எடுத்துக்கொண்டு பின்பற்றவேண்டுமென உணர்ச்சி பொங்க உரையாற்றினார். பின்னர் மையச்சங்க நடவடிக்கைகளாக முதன்மைத்தலைமை பொறியாளர் அலுவலகத்திலும் தலைமைச்செயலக அலுவலகத்திலும் நிலுவையில் உள்ள 11 கோப்புகளை துரிதப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது, எனவும் இளம்பொறியாளர்களை TNESS-ல் இருந்து TNES-க்கு கொண்டு வர மாநில பொதுச்செயலாளர் மிகவும் துரிதமான நடவடிக்கை எடுத்து வருகிறார் என்பதனையும் விரிவாக எடுத்துரைத்தார். இதனைப் பெற்று விட்டோமானால் அரசாணை எண்1, அரசாணை எண்.66 இளம்பொறியாளர் ஊதிய விகிதம் மற்றும் தமிழ்நாடு பொதுத் தேர்வாணையம் மூலம் இளம் பொறியாளர் தேர்வு போன்ற அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு கிடைக்க ஏதுவாக இருக்கின்ற வகையில் மையச்சங்கம் செயல்பட்டு வருவதை விரிவாக எடுத்துரைத்தார்.

இதனையடுத்து மாநிலத்தலைவர் பொறி.எம்.பஞ்சவர்ணம் தமது சிறப்புரையில் அரசாணை எண்.1 அரசாணைஎண்.66 ஆகியவற்றின் காரணமாக நமது உறுப்பினர்களின் பணிவரன்முறை பதவி உயர்வுகள் தடைபட்டு கொண்டு இருப்பதனையும் இந்த அரசாணைகள் மற்றும் திருமால் வழக்கு தள்ளுபடி செய்து அதில் சொல்லப்பட்டிருக்கின்ற Observation காரணமாக நமது மின்னியல் மற்றும் சிவில் உறுப்பினர்களின் பதவி உயர்வு 1:3 விகிதாச்சாரம் சிக்கலில் உள்ளதையும் இதனை முறியடிக்கும் வகையில் மையச்சங்கம் முழு முயற்சி எடுத்து வருவதையும் விரிவாக எடுத்துரைத்தார்.

TNPSC மூலம் இளம் பொறியாளர் தேர்வு செய்தலில் உள்ள Footnote-ன் காரணமாக ஏற்பட்டுள்ள தற்போதைய நிலைமைகளையும் ஊட்டுப்பதவியில் இருந்து பணி ஆய்வாளர்களின் பதவி உயர்வு, பிரிவுக்கொரு தொழில் நுட்ப உதவியாளர் சம்மந்தமாகவும் உதவி செற்பொறியாளர் பதவி உயர்வு சம்மந்தமாகவும் மிக விரிவாக விவரித்து பேசினார்.

உறுப்பினர்கள் கருத்துப் பகுதியில் பொறி.வேதரத்னம் பொறி.ஜெயராமன் பொறி.படைகாத்தான், பொறி.டி. செல்லன், பொறி.எஸ்.சண்முகவடிவு மற்றும் ஏனைய உறுப்பினர்களின் கருத்துகளுக்கும், சந்தேகங்களுக்கும் மாநிலத்தலைவர் உரிய பதிலுரைகளை நேர்த்தியாக வழங்கினார். பின்னர் கிளையின் மூத்த பொறியாளர் பொறி.எஸ்.சுப்ரமணியன் உதவி செயற்பொறியாளர் அவர்கள் 30.06.2015ல் பணி நிறைவு செய்ததையடுத்து அவருக்கு கிளையின் சார்பாக பாராட்டு விழா நடைபெற்றது. இந்த பாராட்டு விழாவில் பொறி.பி. கண்ணன்,பொறி.வி. வேதரத்னம். பொறி.ஆர்.தயாளகுமார், பொறி.எம்.பஞ்சவர்ணம், பொறி.ஆர். ஜெயராமன், பொறி. என். செல்வராஜ், பொறி.எம்.இராஜா, பொறி.எஸ். தியாகராஜன்,பொறி.என். முருகேசன், மற்றும் பலர்

வாழ்த்திப் பேசினர். பொறி.எஸ்.சுப்பிரமணியன் அவர்களது ஏற்புரைக்குப்பிறகு கிளையின் சார்பாக பொன்னாடையும் நினைவுப் பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதனையடுத்து கிளையின் 2015-16ஆம் ஆண்டிற்கான புதிய பொறுப்பாளர்கள் தேர்தல் நடைப்பெற்றது. கிளைத்தேர்தலுக்கு மாநிலத்தலைவர் எம். பஞ்சவர்ணம் மற்றும் கிழக்குமண்டலச் செயலாளர் ஆர். தயாளகுமார் ஆகியோர் தேர்தல் அதிகாரிகளாக இருந்து நடத்திக் கொடுத்ததையடுத்து கீழ்கண்ட பொறியாளர்கள் கிளைப் பொறுப்பாளர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

| | |
|---|---|
| தலைவர் | - பொறியாளர்.பி. கண்ணன், |
| உபதலைவர் | - பொறியாளர் டி. பாலமுருகன், |
| செயலாளர் | - பொறியாளர் ஆர். ஜெயராமன் |
| இணைச்செயலாளர் 1 | - பொறியாளர் வி. வேதரத்தினம் |
| இணைச் செயலாளர் 2 | - பொறியாளர் எஸ். தங்கையன், |
| பொருளாளர் | - பொறியாளர் எஸ்.சி.எஸ். முரளிதரன் |

புதிய பொறுப்பாளர்கள் பதவியேற்பு மற்றும் உறுதிமொழி எடுத்தபின்னர் கிளையின் புதிய தலைவர் பொறியாளர் பி.கண்ணன் பொதுக்குழுக் கூட்டத்தினை தலைமையேற்று நடத்திய பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

1. நமது முன்னாள் குடியரசுத்தலைவர் APJ. அப்துல்கலாம் அவர்களின் மறைவிற்கு இந்தக்கிளை ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.
2. மீதமுள்ள இளம் பொறியாளர்கள் / உதவிப்பொறியாளர்களது பணிவரன்முறையினை விரைந்து பெற்றிட இக்கிளை மையச் சங்கத்தினைக் கேட்டுக்கொள்கிறது.
3. உதவி செயற்பொறியாளர் மின்னியல் சிவில் பதவி உயர்வில் இளம் பொறியாளர் உதவிப் பொறியாளர்களுக்கு 1:3 விகிதாச்சாரத்தினை கடைபிடித்து பதவி உயர்வு பெற்றுத் தந்திட இந்த கிளை கேட்டுக்கொள்கிறது.
4. பணி ஆய்வாளர் பதவியில் இருந்து தொழில் நுட்ப உதவியாளர் இளநிலை வரைதொழில் அலுவலர் பதவி உயர்வு சம்பந்தமான நடவடிக்கையினை துரிதப்படுத்திட இந்த கிளை கேட்டுக்கொள்கிறது.

பின்னர், கிளையின் துணைத்தலைவர் பொறியாளர் டி. பாலமுருகன் நன்றி நவில இரவு சிற்றுண்டிக்குப் பிறகு திருச்சிக் கிளையின் பொதுக்குழுக் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

## திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி - தூத்துக்குடி கிளையின் பொதுக்குழுக் கூட்டமும் 2015-16ஆம் ஆண்டிற்கான கிளைச்சங்க தேர்தலும் 08.07.2015 புதன்கிழமை மாலை 6.00மணியளவில் கிளைதலைவர் பொறி. A. மோகன்தாஸ் அவர்கள் தலைமையில் கிளைச்சங்க கட்டிடத்தில் பொறியாளர் S. ரத்தினசாமி அரங்கில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்களாக மாநிலத்தலைவர் திரு.எம்.பஞ்சவர்ணம் மற்றும் தென்மண்டல செயலாளர் பொறி. P. சசிகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இறைவணக்கத்திற்கு பின் உறுப்பினர்கள் அறிமுகம் செய்துகொண்டனர்.

கிளையின் செயலாளர் பொறி கே. ஆதிமூலம் அவர்கள் சங்க நடவடிக்கைகள் பற்றி விளக்கி கூறினார்கள். கிளையின் பொருளாளர் திரு. வி. இராமகிருஷ்ணன் அவர்களால் 2014-15 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கை பொதுக்குழுவில் சமர்ப்பித்து ஒப்புதல் பெறப்பட்டது.

மேலும் கூட்டத்தில் திரு.A. மோகனதாஸ், திரு.M.S.முகம்மது ரபீ, மூத்த பொறியாளர்கள் திரு.D.வீரராஜ், திரு.R.பாலையன்நாடார், ஆகியோர்கள் விவாதத்தில் பங்கேற்றனர்.

தெற்கு மண்டல செயலாளர் திருP.சசிகுமார் அவர்கள் சங்க நடவடிக்கைகள் பற்றி உரையாற்றினார்கள். பின்னர் மாநிலத்தலைவர் திரு.M. பஞ்சவர்ணம் அவர்கள் தமது விரிவான உரையில் மையச்சங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள், மற்றும் உறுப்பினர்களின் பல்வேறு வினாக்களுக்கு பதிலுரை அளித்தார்கள்.

பின்னர் 2015-16ஆம் ஆண்டிற்க்கான புதிய பொறுப்பாளர்கள் போட்டியின்றி ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைவர் | : | பொறி. A. மோகனதாஸ். |
| 2. | உபதலைவர் | : | பொறி .K. முருகன். |
| 3. | செயலாளர் | : | பொறி. K. ஆதிமூலம். |
| 4. | இணைச்செயலாளர் I | : | பொறி.S. ஜெகநாதன் |
| 5. | இணைச்செயலாளர் II | : | பொறி.G. முருகன். |
| 6. | பொருளாளர் | : | பொறி. V. இராமகிருஷ்ணன். |

பின்பு இணைச்செயலாளர் பொறியாளர் திரு.S. ஜெகநாதன் நன்றி கூற கூட்டம் இனிதே முடிந்தது.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

1. இக்கிளையின் உறுப்பினர் திரு.B.முருகேசன், இளம்பொறியாளர் அவர்களுடைய தாயார் திருமதி.B. ராஜம்மாள், அவர்கள் மறைவிற்கும் கிளை உறுப்பினர் திரு.S.வேலனந்தராஜ், உதவிசெயற்பொறியாளர் அவர்களுடைய தந்தையார் திரு.V.சபாபதி அவர்கள் மறைவிற்கும் மற்றும் கிளை உறுப்பினர் திரு.K.ஆதிமூலம், உதவிப்பொறியாளர் அவர்களின் மாமனார் திரு.S.முத்துராஜ் அவர்கள் மறைவிற்கும் இக்கிளை ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.
2. இளநிலைப்பொறியாளர்கள் தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் நேரடியாக தேர்ந்து எடுக்க தடையாக உள்ள விதி திருத்தங்கள் அரசிடம் பெற முயற்சிகள் மேற்கொள்ள மையச்சங்கத்தை கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.
3. பிரிவுக்கு ஒரு தொழில்நுட்ப உதவியாளரை பணியமர்த்த, உரிய நடவடிக்கை எடுக்க மையச்சங்கத்தை இக்கிளைச் சங்கம் கேட்டுக்கொள்கிறது.
4. முதன்மை தலைமைப்பொறியாளர் அலுவலகத்தில் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பணிநீக்கம் செய்யப்பட்ட இளம்பொறியாளர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களின் பணிமுறிவுக்கால பிழைப் பொறுத்தல் (Condonation of Break in Service) கருத்துருவை அரசுக்கு அனுப்பி உடன் ஆணை பெற்றுத் தர இக்கிளை மையச்சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.
5. உதவிபொறியாளர்/இளம்பொறியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படுவதற்கு முயற்சி எடுத்ததற்கு நெல்லை கிளையின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

6. பட்டயம் பெற்ற பணி ஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவியை விரைந்து பெற்றுத்தர உரிய நடவடிக்கை எடுக்குமாறு இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.
7. சங்க உறுப்பினர்கள் வெவ்வேறு பதவிகளில் பணிஓய்வு/பதவி உயர்வு பெறும் ஆணையினை உடன் பெற்று அந்தந்த கிளைக்கு அன்றே அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு நெல்லை கிளை கேட்டுக்கொள்கிறது.
8. உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு 2015-16ம் ஆண்டிற்கு உரியதை பெற நடவடிக்கை எடுக்குமாறு நெல்லை கிளை கேட்டுக்கொள்கிறது.
9. இளம்பொறியாளர் பதவியில் (பொறியியல் பட்டம் பெற்ற) பணிவரன் செய்யப்பட்டவர்களுக்கு விரைவில் உதவிபொறியாளர் பணி மாற்றம் பெற்றுத் தர விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு நெல்லை கிளை கேட்டுக் கொள்கிறது.
10. It is resolved to permit the newly elected secretary that K.Adimoolam and Treasurer that V.Ramakrishnan in to operate the SB Account of Tamil Nadu Engineers Association, Tirunelveli branch in Canara Bank, Palayamkottai Branch.

## கன்னியாகுமரி கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கன்னியாகுமரி கிளையின் பொதுக்குழு கூட்டம் M.A.கோல்டுவின் இம்மானுவேல் அரங்கில் 9.7.2015 அன்று நடைபெற்றது. துணைத்தலைவர் பொறி.S. ரெத்தினசாமி அவர்கள் தலைமையேற்று கூட்டத்தை நடத்தி வைத்தார். சிறப்பு விருந்திரனர்களாக மாநில தலைவர் பொறி.M. பஞ்சவர்ணம், தென்மண்டல செயலாளர் பொறி.P. சசிகுமார் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். பொருளாளர் பொறி.S.ஜெயக்குமார் அனைவரையும் வரவேற்று பேசினார். உறுப்பினர் அறிமுகத்திற்கு பின்னர் செயலாளர் பொறி.M. தாணுமூர்த்தி சங்க நடவடிக்கை பற்றி விரிவாக பொறி.P.சசிகுமார் அவர்களும், பொறி.M. பஞ்சவர்ணம் அவர்களும் எடுத்துரைத்தார்கள். பின்னர் சிறப்பு விருந்தினர்கள் கௌரவிக்கப்பட்டனர். மகளிர் உறுப்பினர்கள் அதிகம் கலந்து கொண்டனர். பின்னர் 2015-2016 ம் ஆண்டிற்கான பொறுப்பாளர் தேர்தல் நடைபெற்றது. மாநில தலைவர் பொறி.M.பஞ்சவர்ணம் அவர்கள் தேர்தலை நடத்திவைத்தார். அதில் கீழ்கண்டவர்கள் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டின் பொறுப்பாளர்களாக ஏகமனதாக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| 1. தலைவர் | - | பொறியாளர். P. சசிகுமார் |
| 2. துணைத்தலைவர் | - | பொறியாளர். S. ரெத்தினசாமி |
| 3. செயலாளர் | - | பொறியாளர். M. தாணுமூர்த்தி |
| 4. இணை செயலாளர் 1 | - | பொறியாளர். A. பிரேமலதா |
| 5. இணை யெலாளர் 2 | - | பொறியாளர். N. சதாசிவன் |
| 6. பொருளாளர் | - | பொறியாளர். S. ஜெயக்குமார் |

பின்னர் இணைச் செயலாளர் N. சதாசிவன் நன்றி நவில கூட்டம் இனிதே முடிவுற்றது. கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. G.O.Ms.No.334/PW(W2)/Department dated 19.10.2007 அன்று தினக்கூலியிலிருந்து பணி நிரந்தரம் செய்யப்பட்ட பணி ஆய்வாளர்களுக்கு தினக்கூலியில் 10 ஆண்டுகள்

பணி முடித்து தேதியிலிருந்து ஊதிய நிர்ணயம் மற்றும் முதுநிலை பெற்றுத்தர மைய சங்கத்தை கோருதல்.

2. பணி ஆய்வாளர்களில் விருப்பமுள்ளவர்களுக்கு துறையில் காலியாக உள்ள இளநிலை வரை தொழில் அலுவலர் பதவியினை விரைவாக பெற்று தர மைய சங்கத்தை கோருதல்.
3. பணி ஆய்வாளர்களில் விருப்பமுள்ளவர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர் பதவியினை பெற்றுதர மைய சங்கத்தை கோருதல்.
4. பணி நீக்கம் செய்யப்பட்ட இளநிலை பொறியாளர்களின் பணியிடை காலம் பிழைபொறுத்தலை (Break in Condonation) அவர்கள் ஓய்வு பெறுவதற்கு முன்னதாக விரைவாக பெற்றுதருதல்.
5. துறையில் காலியாக உள்ள நிரந்தர தொழில்நுட்ப உதவியாளர் பதவியினை பணி ஆய்வாளர்களுக்கு முதுநிலைப்படி பதவி உயர்வு உடனடியாக பெற்று தருதல்.
6. பணி ஆய்வாளர்களுக்கு அந்த பதவியில் 4 ஆண்டுகள் பணிமுடித்த தேதியிலிருந்து முன் தேதியிட்டு தொழில்நுட்ப உதவியாளர் பதவி பெற்று தருதல்.
7. வரலாறு காணாத அளவில் கோப்புகள் (நமது) தலைமை பொறியாளர் அலுவலகத்தில் தேங்கியிருப்பதை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல அகிம்சை வழியில் போராட்டம் செய்ய வேண்டும்.

## திண்டுக்கல் கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திண்டுக்கல் கிளையின் பொதுக்குழு மற்றும் 2015-2016 ஆம் ஆண்டிற்கான கிளைச்சங்க பொறுப்பாளர்களுக்கான தேர்தல் 25.07.2015ம் தேதி சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் திண்டுக்கல் AGS மஹாலில் கிளையின் மூத்த உறுப்பினர் பொறி.M. பாக்கியசாமி அவர்களின் தலைமையிலும் தேர்தல் பொறுப்பாளர்களான பொறி.A. நடராஜன் நிதிச் செயலாளர் மையச் சங்கம் பொறி.S. லீலாவதி மைய மண்டலச் செயலாளர் அவர்களின் முன்னிலையிலும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே துவங்கப்பட்டது.

உறுப்பினர்கள் அறிமுகத்திற்குப் பின்னர் கிளைச் செயலாளர் பொறி.K.K.ஆறுமுகம் வரவேற்புரை ஆற்றினார். கிளையின் உறுப்பினர் பொறி.M. பாக்கியசாமி கிளையின் செயல்பாடுகள் குறித்து விளக்கினார். மையமண்டலச் செயலாளர் பொறி.S. லீலாவதி அவர்கள் சங்கத்தின் நடவடிக்கைகளை உறுப்பினர்களிடம் தெரிவித்தார். மையச்சங்க நிதிச் செயலாளர் பொறி.நடராஜன் மையச்சங்க செயல்பாடுகளையும், சங்கம் எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகள் குறித்தும் நீண்ட உரையாற்றினார். பொறி. பி. பன்னீர் செல்வம் பொருளாளர் கிளை வரவு, செலவு கணக்குகள் சமர்ப்பித்து உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெற்றார். பொறி. எஸ். சரவணக்குமார் செயலாளர் கிளைச் சங்க நடவடிக்கைகள் குறித்தும், இளநிலைப் பொறியாளர்களின் ஊதிய முரண்பாட்டைக்களைய வேண்டி மையச் சங்கத்தை கேட்டுக் கொண்டார். உறுப்பினர்கள் கே. விஜயமூர்த்தி, கே.கண்ணன், எம்.மூர்த்தி,எம் செந்தில், வி. இளங்கோ ஆகியோர் இளநிலை பொறியாளர்களின் ஊதிய முரண்பாடுகள் பற்றியும், பணி ஆய்வாளர்களில் இருந்து இளநிலை வரை தொழில் அலுவலர்/ தொழில் நுட்ப உதவியாளர் பணி மாற்றம் செய்வது குறித்தும், விடுபட்ட பணிவரன்முறை செய்யப்பட வேண்டிய இளநிலை பொறியாளர்களது பட்டியலை விரைவில் பெற்றுத்தர மையச்சங்கத்தை கேட்டுக் கொண்டனர்.

பின்னர் 2015-2016 ஆம் ஆண்டிற்கான கிளை பொறுப்பாளர்கள் தேர்தலுக்கு பொறுப்பாளர்களாக பொறி. ஏ. நடராஜன் நிதிச் செயலாளர் மற்றும் பொறி.எஸ். லீலாவதி மையமண்டலச் செயலாளர் நியமிக்கப்பட்டனர். கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பொறி. M.பாக்கியசாமி |
| உபதலைவர் | - | பொறி. S. சரவண குமார் |
| செயலாளர் | - | பொறி. K.K. ஆறுமுகம் |
| இணைச்செயலாளர் 1 | - | பொறி. K. கண்ணன் |
| இணைச்செயலாளர் 2 | - | பொறி. M. செந்தில் |
| பொருளாளர் | - | பொறி. T. ரவிச்சந்திரன் |

கிளைச்சங்க உறுப்பினர் பொறி.E. நாகராஜன் இளநிலை பொறியாளர் கடந்த 30.06.2015 அன்று ஓய்வு பெற்றதையோட்டி கூட்டத்தில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பொறியாளர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். பொறி. T. ரவிச்சந்திரன் பொருளாளர் நன்றி தெரிவிக்க நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே முடிவு பெற்றது.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இளநிலை பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர்களுக்கு இடையில் உள்ள ஊதிய முரண்பாட்டை களையவும், அடுத்து ஊதியக்குழு பரிந்துரையில் இவ்வாறான முரண்பாடுகள் இல்லாமல் இருக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க மையச்சங்கத்தை கேட்டுக் கொள்ளுதல்.
2. விடுபட்ட இளநிலை பொறியாளர்களின் பணிவரன்முறை பட்டியலை துரிதமாக பெற்றுத் தரக்கோருதல்.
3. பணி ஆய்வாளர் பணியிலிருந்து தொழில்நுட்ப உதவியாளர் / இளநிலை வரை தொழில் அலுவலர் பணி மாற்றம் பெற்றுத்தரக் கோருதல்.
4. தொழில் நுட்ப உதவியாளர் பணியிலிருந்து இளநிலை பொறியாளர் பதவி உயர்வு பெற்றுத் தரக்கோருதல்.

## சிவகங்கை கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சிவகங்கை கிளையின் பொதுக்குழு கூட்டம் 18.07.2015 அன்று காலை 10.35 மணியளவில் கிளைத் தலைவர் பொறி.எ.பூச்சந்திரன் தலைமையில் காரைக்குடி பொதுப்பணித்துறை வளாகத்தில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளர்களாக மையச்சங்க தலைவர் எம்.பஞ்சவர்ணம் மற்றும் மைய மண்டல செயலர் எஸ். லீலாவதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பொறி.எ.திருவேங்கடமூர்த்தி இணைச் செயலர் வரவேற்புரை நிகழ்த்தினார். உபதலைவர் உரைக்குப் பின் கிளைச் செயலாளர் பொறி.வி.பரமசிவம் மற்றும் மையச் சங்க பொறுப்பாளர்கள் சங்க நடவடிக்கைகள் பற்றி எடுத்து கூறினார்கள். பொருளாளர் பொறி.எஸ்.குமார் அவர்கள் கிளை சங்க வரவு செலவுகளை எடுத்துரைத்து அவையில் ஒப்புதல் பெற்றார். பொறி.சி.கண்ணன் கிளை இணை செயலர் நன்றி கூற நாட்டுப் பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

பின்னர் 2015-2016ம் ஆண்டிற்குரிய சிவகங்கை கிளையின் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பொறியாளர். வி.பரமசிவம் |
| உபதலைவர் | - | பொறியாளர் எ. திருவேங்கடமூர்த்தி |
| செயலாளர் | - | பொறியாளர் சி. இராஜ் |
| இணைச்செயலாளர் 1 | - | பொறியாளர் எஸ். சேகர் |
| இணைச்செயலாளர் 2 | - | பொறியாளர் சி. கண்ணன் |
| பொருளாளர் | - | பொறியாளர் எஸ். குமார் |

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இரங்கல் தீர்மானம் : இக்கிளையின் மூத்த உறுப்பினர் பொறி.கோ.பெருமாள் இ.பொ (ஓய்வு) அவர்களின் மறைவிற்கு இக்கிளை ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.
2. 1997 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து இளம் பொறியாளர் பதவி உயர்வு வழங்கும்போது விடுப்பட்டு பின்னர் 1999 ஆம் ஆண்டு பதவி உயர்வு வழங்கப்பட்ட இளம் பொறியாளர்களுக்கு, உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வு பெற்றுத்தர மையச்சங்கத்தை வேண்டி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.
3. பொதுப்பணித்துறையில் இயங்கி வரும் ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பணியமர்வு பெறுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொண்டு அப்பணியிடங்களை பெற்றுத்தர இக்கிளை கேட்டுக் கொள்கிறது.
4. பொதுப்பணித்துறையில் காலியாக உள்ள உதவி வரைவாளர், இளநிலை வரை தொழில் அலுவலர், வரைதொழில் அலுவலர் பணியிடங்களை நிரப்பிட தேவையான நடவடிக்கைகளை எடுக்க மையச் சங்கத்தை வேண்டி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

## புதுக்கோட்டை கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், புதுக்கோட்டை கிளையின் பொதுக்குழு கூட்டம் 01.08.2015 சனிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் புதுக்கோட்டை பொதுப்பணித்துறை வளாகத்தில் உள்ள கிளைச்சங்க கட்டிடத்தில் நடைப்பெற்றது. கிளையின் இணைச்செயலாளர் பொறியாளர் N. பாஸ்கர் அவர்கள் வரவேற்புரை ஆற்றிய பின் கிளையின் தலைவர் பொறியாளர் S. சித்தார்த்தன் அவர்கள் தலைமையில் கூட்டம் துவங்கியது. முன்னாள் குடியரசு தலைவர் Dr.A.P.J. அப்துல் கலாம் அவர்களின் மறைவிற்கு கூட்டத்தில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கிளைச்சங்க நடவடிக்கைளை கிளையின் செயலாளர் பொறியாளர் G.அண்ணாமலை அவர்கள் விரிவாக எடுத்துரைத்தும் பொதுக்குழுவிற்கு அதிக அளவில் (70%) உறுப்பினர்கள் வருகைபுரிந்தமைக்கு பாராட்டும் தெரிவித்தார். கிளையின் பொருளாளர் பொறியாளர் கே.வெள்ளிமலை அவர்கள் வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்து அவையின் ஒப்புதலைப் பெற்றார். சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துக்கொண்ட கிழக்கு மண்டல செயலாளர் பொறியாளர் ஆர்.தயாளகுமார் அவர்களும் மாநிலத் தலைவர் பொறியாளர் எம். பஞ்சவர்ணம் அவர்களும் மைய சங்க நடவடிக்கைகளை விரிவாக எடுத்துரைத்தனர். பொறியாளர்கள் டி.வீரய்யன், ஆர்.ரவிச்சந்திரன், டி.எஸ்.பார்த்திபன், சி.சின்னத்தம்பி ஆகியோர் கேட்ட சந்தேகங்களுக்கு மாநிலத்தலைவர் அவர்கள் விரிவாக விளக்கம் அளித்தார்.

அதன்பின் 2015-16 ஆம் ஆண்டிற்கான கிளைப்பொறுப்பாளர்கள் தேர்தல் மாநிலத்தலைவர் அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. கீழ்கண்ட பொறியாளர்கள் புதுக்கோட்டை கிளையின் பொறுப்பாளர்களாக கிளையின் உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பொறியாளர். கே. சத்தார் |
| துணைத்தலைவர் | - | பொறியாளர். டி. வீரைய்யன், |
| செயலாளர் | - | பொறியாளர். ஜி. அண்ணாமலை, |
| இணைச்செயலாளர் - 1 | - | பொறியாளர். என். பாஸ்கர் |
| இணைச்செயலாளர் - 2 | - | பொறியாளர். ஆர். வீரமுத்து, |
| பொருளாளர் | - | பொறியாளர். கே. வெள்ளிமலை, |

துணைத்தலைவர் பொறியாளர் டி. வீரய்யன் அவர்கள் நன்றி நவில தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

## தஞ்சாவூர் கிளை

தஞ்சாவூர் கிளையின் பொதுக்குழு, மற்றும் கிளையின் 2015 - 2016 ஆண்டு பொறுப்பாளர்கள் தேர்வும் 25.07.2015 மாலை 5.30 மணியளவில் "பொறியியல் இல்லம்" தஞ்சாவூரில் தலைவர் பொறி. R. வேதமூர்த்தி, அவர்களின் தலைமையில் இறை வணக்கத்துடன் இனிதே துவங்கப்பட்டது.

உறுப்பினர்கள் அறிமுகத்திற்கு பின்னர். கிளையின் தலைவர் பொறி. R.வேதமூர்த்தி, வரவேற்புரை ஆற்றினார். கிளையின் செயல்பாடுகள் குறித்து, கிளையின் செயலாளர் பொறி. N. நாகராஜன் விரிவாகப்பேசியும் மையசங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் உறையாற்றினார். மையச் சங்க செயல்பாடுகள் குறித்து கிழக்கு மண்டலச் செயலாளர் பொறி. ஆர். தயாள குமார் விரிவாக எடுத்துரைத்தார். பின்னர், சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்ட மாநில தலைவர் பொறி. M. பஞ்சவர்ணம் மற்றும் மாநில துணைத்தலைவர் பொறி. சி. கணபதி மையச்சங்கத்தில், எடுக்கப்பட்ட, எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்து உறுப்பினர்களின் கேள்விகளுக்கு விரிவாக விளக்கம் அளித்தனர். உறுப்பினர்கள். பொறி. R. இளமாறன், பொறி.S. அய்யனார், A.ரமேஉஷ், பணிஆய்வாளர் மற்றும் பொறி.V. சிவப்பிரகாசம் ஆகியோர் தத்தமது கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். அதன் பின்னர், கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. பின்பு 2015-2016ம் ஆண்டிற்கான கிளைத்தேர்தல், நடைபெற்று, கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பொறி. R. வேதமூர்த்தி, |
| துணைத்தலைவர் | - | பொறி. R. இளமாறன், |
| செயலாளர் | - | பொறி. K. சோமசுந்தரம், |
| இணைச் செயலாளர் I | - | பொறி. G. லலிதா, |
| இணைச் செயலாளர் II | - | பொறி. M. பிரதாப் பிரேம்குமார், |
| பொருளாளர் | - | பொறி. V. சிவப்பிரகாசம், |

கிளையின் துணைத்தலைவர், பொறி.R. இளமாறன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலை உடன் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு தஞ்சை கிளை கேட்டுக் கொள்கிறது.

2. துறைதலைமைக்கு இந்திய ஆட்சி பணி ( I.A.S ) அதிகாரியை நியமிக்க ஆவண செய்றுமாறு தஞ்சை கிளை கேட்டுக் கொள்கிறது.
3. பட்டயம் பெற்ற பணிஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர், இளநிலை வரைதொழில் அலுவலர் பதவியை விரைந்து பெற்றுத்தர உரிய நடவடிக்கை எடுக்குமாறு இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.
4. சங்க உறுப்பினர்கள் வெவ்வேறு பதவிகளில் பணிஓய்வு, பதவிஉயர்வு பெறும் ஆணையினை உடன் பெற்று அந்தந்த கிளைக்கு அன்றே அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு தஞ்சை கிளை கேட்டுக் கொள்கிறது.
5. இளம்பொறியாளர் பதவியில் (பொறியியல் பட்டம் பெற்ற) பணிவரன் செய்யப்பட்டவர்களுக்கு விரைவில் உதவி பொறியாளர் பணி மாற்றம் பெற்றுத் தர விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு தஞ்சை கிளை கேட்டுக் கொள்கிறது.

### வடக்கு மண்டல பொறுப்பாளர்கள் சிறப்பு கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கம், காஞ்சிபுரம் கிளையில் வடக்கு மண்டல பொறுப்பாளர்கள் சிறப்பு கூட்டம் 13.09.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் கிளைச் சங்கத் தலைவர் பொறி.L.பிலோமின்ராஜ் அவர்கள் தலைமை வகிக்க, மாநில சங்க துணைத்தலைவர் பொறி.S.பாஸ்கரன் மற்றும் வடக்கு மண்டல செயலாளர் பொறி.B. நாகலிங்கம் ஆகியோர் முன்னிலையில் இறை வணக்கத்துடன் இனிதே துவங்கப்பட்டது.

வடக்கு மண்டல பொறுப்பாளர்கள் அறிமுகத்திற்கு பின்னர் கிளையின் செயலாளர் பொறி.R.S. சுந்தரம் அவர்கள் வரவேற்புரையாற்றினார். இதனைத் தொடர்ந்து துணைத்தலைவர் பொறி.S.பாஸ்கரன் மற்றும் வடக்கு மண்டல செயலாளர் பொறி.B.நாகலிங்கம் அகியோர் மையச் சங்க செயல்பாடுகள் குறித்து உரையாற்றினார்கள்.

பின்னர் இக்கூட்டத்தில் கீழ்க்ண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. தற்போது அரசின் பரிசீலனையில் உள்ள தினக்கூலி பணியாளர்கள் 10 ஆண்டு பணி முடித்தவர்கள் சுமார் 1200 பேருக்கு பலவேறு பதவிகளுக்கு தயார் நிலையில் உள்ள பட்டியலில் டிப்ளமோ பட்டயப் படிப்பு முடித்துள்ள பணியாளர்களுக்கு பணியமர்வு வழங்கும் பட்சத்தில் அவர்களின் கல்வி தகுதிக்கு ஏற்ப தொழில் நுட்ப உதவியாளர் பதவியில் பணியமர்வு வழங்க ஆவண செய்யுமாறு தமிழக அரசை வலியுறுத்த மையச் சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.
2. பகுதிநேர பொறியியல் பட்டப்படிப்பு (Part time, BE) முடித்துள்ள இளநிலைப்பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்களாக பதவி பெயர் மாற்றம் (Re-Designation) செய்திட உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.
3. தொழில் நுட்ப உதவியாளர்கள் 15 பேருக்கு இளநிலைப்பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்க முதன்மை தலைமைப் பொறியாளர் பொதுப்பணித்துறை அலுவலகத்தில் நிலுவையிலுள்ள கோப்பினை உடனடியாக முடித்து பதவி உயர்வு பெற்று தர வேண்டி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.
4. கடந்த 05.09.2015 அன்று மதுரையில் பட்டயம் படித்த பணி ஆய்வாளர்களுக்கு இளநிலை வரை தொழில் அலுவலர்/ தொழில் நுட்ப உதவியாளர் பதவி பணி மாற்றம் செய்திட கலந்தாய்வு கூட்டத்தினை சிறப்பாக நடத்தி முடித்தமைக்காக வடக்கு மண்டலம் சார்பாக மையச் சங்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5. வடக்கு மண்டலத்தை சார்ந்த கீழ்க் கண்ட கிளைகளின் பொதுக்குழு கூட்டம் கீழ்க் கண்ட தேதிகளில் நடத்திட இந்த சிறப்பு வடக்கு மண்டல பொறுப்பாளர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| காஞ்சிபுரம் கிளை | - | 10.10.2015 |
| கடலூர் கிளை | - | 24.10.2015 |
| வேலூர் கிளை | - | 07.11.2015 |

கிளைச் சங்கத்தின் செயலாளர் பொறி. R.S. சுந்தரம் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண்:423 பொதுப்பணி(எப்1)த்துறை நாள் 31.08.2015)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | T.S. ரூபிணி | தலைமைப்பொறியாளர் |
| 2. | C. கண்ணப்பன் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 3. | S. வேதமூர்த்தி | உதவி செயற்பொறியாளர்(மின்) |

(ஆளுநரின் ஆணைப்படி)

**நா.ச.பழனியப்பன்**

அரசு முதன்மைச் செயலாளர்

## பணி ஓய்வு பெற்றவர்கள்

**செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/20601/2015 /நாள் 26.08.2015ன் படி 31.08.2015 பி.ப. அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விபரம்.**

| வ. எண் | பெயர் திருவாளர்கள் | பிறந்த தேதி | பதவிப் பெயர் |
|---|---|---|---|
| 1. | C. மாரிமுத்து | 30.08.1957 | இளம் பொறியாளர் |

**சு. திருமாறன்**

**முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது.,**

**(ம) தலைமைப் பொறியாளர் (பொது)**

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண்:460 பொதுப்பணி(எப்1)த்துறை நாள் 30.09.2015)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | C. ஆறுமுகம் | கண்காணிப்புப் பொறியாளர்(மின்) |
| 2. | M. சுகுமார் | மின் பொறியாளர் |
| 3. | K. இராஜன் | உதவி செயற்பொறியாளர் |
| 4. | B. சோமசுந்தரம் | தலைமை வரைதொழில் அலுவலர் |
| 5. | V. முத்துசாமி | துணை இயக்குநர் (நிலவியல்) |
| 6. | D. செல்வராஜ் | தொழில்நுட்ப வல்லுநர் (புவிபொளதீகம்) |

(ஆளுநரின் ஆணைப்படி)

**நா.ச.பழனியப்பன்**

அரசு முதன்மைச் செயலாளர்

சிவகங்கை கிளை பொறுப்பாளர்கள் உறுதிமொழி ஏற்கும் காட்சி



புதுக்கோட்டை கிளை பொறுப்பாளர்கள் உறுதிமொழி ஏற்கும் காட்சி



திருச்சி கிளை பொறுப்பாளர்கள் உறுதிமொழி ஏற்கும் காட்சி





# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்! வணக்கம்!

நிகழும் மங்களகரமான மன்மத வருடம் ஐப்பசி மாதம் 08- ஆம் தேதி (25.10.2015) ஞாயிற்றுக்கிழமை திரயோதசி திதியும், உத்திரட்டாதி நட்சத்திரமும், அமிர்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 7.30 மணிக்கு மேல் 9.00 மணிக்குள் விருச்சிக லக்னத்தில்

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தாலுக்கா, வேங்கூரைச் சேர்ந்த கீழமுருக்கூர்
தெய்வத்திரு பெ.பெரியசாமி - தெய்வத்திரு பெ.முருகாயி அவர்களின் பேரனும்,
திரு பெ.லோகராஜன் - திருமதி லோ.வீரரமணி தேவி அவர்களின்
குமாரனுமாகிய திருவளர்ச்செல்வன்

**பெ.லோ.அருண்,** M.B.A., M.E,
(Asst.Prof.Saveetha Engineering College,Chennai)

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தாலுக்கா,
கம்பரசம்பேட்டை, பெரியார் நகர்,
தெய்வத்திரு.நடேசன் - திருமதி.பெரியக்காள் அவர்களின் பேத்தியும்
திரு.N.பூசமணி - திருமதி .P.குணவதி அவர்களின்
குமாரத்தியுமாகிய திருவளர்ச்செல்வி

**சாந்தஷீலா (எ) பூ.பிந்து.**,M.E.,

ஆகிய இருவருக்கும் திருமணம் செய்வதாகப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, மேற்படி திருமணம் **தஞ்சாவூர், மெடிக்கல் காலேஜ் ரோடு, முனிசிபல் காலனி, P.K.மஹால் A/C திருமணமண்டபத்தில்** நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்க வேண்டுமாய் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் அன்புள்ள

திரு.பெ.லோகராஜன்.M.E.,
(Executive Engineer, P.W.D.Chennai)
திருமதி.லோ.வீரரமணிதேவி
திரு.லோ.அசோக்குமார்,B.E.,
HIG-413,தமிழ்பல்கலைக்கழக வளாகம்
தஞ்சாவூர்.செல் 93603 57967.

# Wedding Invitation

Tirumathi **Gomathi Ashok Kumar,** B.A

Southern Railway

and

Er. **V. Ashok Kumar,**

**Assistant Executive Engineer/ TNEB (TANGEDCO)**

**General Secretary/ T.N.E.B. Engineer's Sangam**

**Secretary General / All India Federation of Power Diploma Engineers**

***Cordially solicit your presence with family and friends***

***to grace the auspicious occasion of the***

***marriage of their daughter***

Selvi. **A. PREETHA,** M.S., GNIIT

WIPRO Technologies

with

Selvan. **Dr. S. RAJU,** B.P.T., FRCPT., MIAP.,

Shri Sai Physiotherapy Clinic, Bengaluru

**S/o Mr. M.R. Subramani - Mrs. Banumathi Subramani**

on Monday, the 19th October 2015

between 6.00 a.m. and 7.30 a.m.

at **G.G. Mahal Kalyana Mandapam**

**No. 1A, Tamizhar Street, Kamala Nehru Nagar,**

**Arumbakkam, (Back Side of M.M.D.A Bus Stand)**

Chennai - 106.

---

***With best compliments from:***

**A. Ram Kumar, M.B.B.S**

Relatives & Friends

**Reception: 18.10.2015, Sunday, 6.30 p.m**

05.09.2015 அன்று மதுரையில் நடைபெற்ற பணிஆய்வாளர்களுக்கான சிறப்புக் கூட்ட நிகழ்வுகள்



சிவகங்கை கிளை பொதுக்குழுக் கூட்ட நிகழ்வுகள்



## 05.09.2015 அன்று மதுரையில் நடைபெற்ற பணிஆய்வாளர்களுக்கான சிறப்புக் கூட்ட நிகழ்வுகள்






# 05.09.2015 அன்று மதுரையில் நடைபெற்ற பணிஆய்வாளர்களுக்கான சிறப்புக் கூட்ட நிகழ்வுகள்






Under Postal Regd No. TN/CH/(C)/358/15-17 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/2015-17Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

October 2015

## 05.09.2015 அன்று மதுரையில் நடைபெற்ற பணிஆய்வாளர்களுக்கான சிறப்புக் கூட்ட நிகழ்வுகள்



நமது சங்கத்தின் Website : www. tnengga. org
email id : tneapwd@yahoo.co.in

தந்தி பொறியாளர்
தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

Published on 08-10-2015
Postng on 10-10-2015

**REGD. NEWS PAPER**
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY:Er. D. MURUGESAN, D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5
PUBLISHED BY: Er. K. KAMALDEEN, D.C.E. B.E., PUBLICATION SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. J. VINOTH, AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. PH: 94440 75312